


**30. 06. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. விலங்குகளின் நலனிற்காக கால்நடை மருத்துவர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. ராணுவ ஓய்வூதியதாரர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று குறைகளை நிவர்த்தி செய்ய நடமாடும் வாகன சேவை தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

3. ஜவுளி துறையில் செயற்கை இழை உற்பத்தியை ஊக்குவிக்க பல்வேறு நவீன திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக மத்திய இணை அமைச்சர் திரு.பபித்ரா மார்கரிட்டா தெரிவித்துள்ளார்.

4. சென்னையில் 208 கோடி ரூபாய் மதிப்பிலான 120 புதிய மின்சார பேருந்துகளின் சேவையை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று துவக்கிவைத்தார்.

5. விம்பிள்டன் கிராண்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகள் லண்டனில் இன்று தொடங்குகின்றன.

**இனி விரிவான செய்திகள்**

***********

**குடியரசு தலைவர்**

கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் பரேலியில் இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் 11ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், கிராமப்புறங்களிலும்

ஊரக பகுதிகளிலும் விலங்கினங்களுக்கு மருத்துவ சேவைகள் கிடைப்பது மிக அவசியம் என்று எடுத்துரைத்தார்.

விலங்குகளின் ஆரோக்கியத்தை பிரதிபலிக்கும் வகையில் **விலங்கு நல முகாம்கள்** நடத்தப்பட வேண்டும் என்று கூறிய அவர் இத்தகைய முகாம்கள் கிராமப்புறங்களில் நடத்தப்படுவதால் உயிரினங்களின் மருத்துவ நலன் உறுதி செய்யப்படும் என்றார்.

விலங்கினங்களின் நலத்திற்காக பணியாற்றுவதில் கால்நடை மருத்துவர்களின் பங்களிப்பின் அவசியத்தை எடுத்துரைத்த அவர், மருத்துவர்கள் இது சார்ந்த பயிற்சிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் 135 ஆண்டுகளாக பல்வேறு சாதனைகளுடன் பயணித்து வருவதாக கூறிய அவர் இந்நிறுவனத்தை சேர்ந்த விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள் கால்நடை ஆய்வுகளில் இன்றியமையா பங்காற்றுவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் இந்நிறுவனம் கால்நடை ஆராய்ச்சிகள் மட்டுமல்லாமல் ஊரக மேம்பாட்டிற்கும் சிறப்பான பங்களித்து வருவதாக கூறினார்.

குடியரசு தலைவர் கோரக்பூர் எயிம்ஸ் நிறுவனத்தின் முதல் பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.

***********

**எல்.முருகன் திருச்சி**

மத்திய அரசின் சேவைகளை மக்களிடம் நேரில் கொண்டு சேர்க்கும் வகையில் திருச்சியில் இன்று மாபெரும் ராணுவ ஓய்வூதியதாரர்கள் குறைதீர் நாள் முகாம் நடைபெறுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

திருச்சி ஆயுதபடை மைதானத்தில் முப்படை ஓய்வூதியதாரர்களுக்கான மாபெரும் குறைதீர்க்கும் முகாமில் இன்று உரையாற்றிய அவர் இம்முகாம் மூலம் ஆறாயிரம் பேர் பயனடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டிலேயே முதல் முயற்சியாக 5 நடமாடும் வாகனங்கள் மூலம் ஓய்வூதியதாரர்களின் இல்லங்களுக்கே சென்று அவர்களது குறைகளை களைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இம்முகாம் நாட்டில் 206ஆவது நிகழ்ச்சியாகவும், தமிழ்நாட்டில் 52 ஆவது நிகழ்வாகவும் நடத்தப்படுவதாக எடுத்துரைத்த அமைச்சர் இதன்மூலம் நாட்டிற்காக

சேவையாற்றும் ராணுவ படைவீரர்களின் மீது மத்திய அரசின் அக்கறை புலப்படுவதாக கூறினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான வெளிப்படைத்தன்மையுடன் கூடிய நல்லாட்சியில் ஏழை எளிய மக்கள் நடுத்தர பிரிவினர் உள்ளிட்டோர் பயன்பெறும் வகையில் அனைவருக்கும் வீட்டுவசதி, வேளாண் நிதி உதவி திட்டம் போன்றவை செயல்படுத்தப்படுவதாக கூறிய அவர் அதேபோல் ஓய்வூதியதாரர்களும், குடும்ப ஓய்வூதியதாரர்களும், பயன்பெறும் வகையில் திட்டங்களை பாதுகாப்பு அமைச்சகம் மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

**வாய்ஸ்**

மாலை 6 மணிவரை நடைபெறும் இம்முகாமில் 200க்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஓய்வூதியதாரர்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்திசெய்து வருகின்றனர்.

பல ஆண்டுகளாக ஓய்வூதியம் கிடைக்கப்பெறாதவர்களுக்கும், நிலுவையில் உள்ளவர்களுக்கும் இம்முகாம் மூலம் ஓய்வூதியம் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

ஒன்றரை கோடி ரூபாய் பெருமான காசோலைகள் ஓய்வூதியதாரர்களுக்கு இன்று வழங்கப்படுகிறது.

***********

**நிர்மலா சீதாராமன்**

ஸ்பெயின் போர்ச்சுகல் பிரேசில் நாடுகளில் நிதி சார்ந்த நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அந்நாடுகளுக்கு புறப்பட்டார்.

தமது பயணத்தின் முதற்கட்டமாக ஸ்பெயினில் நடைபெறும் நிதிசார்ந்த சவால்கள் மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்குகள் தொடர்பான மாநாட்டில் அவர் பங்கேற்கிறார்.

சர்வதேச நிதி கட்டமைப்பிற்கான சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் 4ஆவது சர்வதேச நிதி சார் மேம்பாட்டு மாநாட்டில் அவர் கலந்துகொள்கிறார்.

சர்வதேச வர்த்தக கூட்டமைப்பு தலைமைத்துவ உச்சிமாநாட்டிலும் அமைச்சர் உரையாற்றுகிறார்.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக ஜெர்மனி, பெரு, நியூசிலாந்து நாட்டு தலைவர்களுடனும் திருமதி நிர்மலா சீதாராமன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இதனை தொடர்ந்து போர்ச்சுகலில் அந்நாட்டு நிதியமைச்சருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் அவர் பிரேசிலில் 10ஆவது வருடாந்திர புதிய வளர்ச்சி வங்கி கூட்டத்திலும் உரையாற்றுகிறார்.

ரியோடி ஜெனிரோவில் நடைபெறும் முதலாவது பிரிக்ஸ் நிதியமைச்சர்கள் வங்கி ஆளுநர்கள் கூட்டத்திலும் திருமதி நிர்மலா சீதாராமன் கலந்துகொள்கிறார்.

***********

பபித்ரா

ஜவுளி துறையில் செயற்கை இழை உற்பத்தியை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய ஜவுளித் தொழில் துறை இணை அமைச்சர் திரு.பபித்ரா மார்கரிட்டா தெரிவித்துள்ளார்.

கோவையில் இந்திய ஜவுளித்துறை கூட்டமைப்பு சார்பில் இன்று நடைபெற்ற 3வது செயற்கை இழை கருத்தரங்கை துவக்கி வைத்து பேசிய அவர், ஜவுளித்துறையின் தொழில்நுட்ப உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் விதமாக **பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டம்** உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

செயற்கை இழை தயாரிப்புகள் ஏற்றுமதி 6 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளதாகவும், சர்வதேச சந்தைக்கு உகந்த சூழல் இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

இதில் தமிழகம் உட்பட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த ஜவுளித் தொழில் துறையினர் பங்கேற்றனர்.

***********

**ஜெய்சங்கர்**

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் 3 நாள் அரசு முறை பயணமாக இன்று அமெரிக்கா செல்கிறார்.

நாளை நடைபெற உள்ள குவாட் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் டாக்டர் ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.

இந்தோ பசிபிக் பிராந்தியத்தின் வெளிப்படைத்தன்மை, தடையற்ற வர்த்தகம் உள்ளிட்டவை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல்களுக்கு பின்னர் நடைபெறும் முதல் குவாட் அமைச்சர்கள் மாநாடு இது என்பது குறிப்பிடத்தக்கது.

தீவிரவாதத்தின் பாதிப்புகள் குறித்து டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் நியூயார்க்கில் ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் எடுத்துரைப்பார் என தெரிகிறது.

***********

**அவசர நிலை**

அவசர நிலை பிரகடணப்படுத்தப்பட்ட 50 ஆண்டை ஒட்டி இதுகுறித்த விழிப்புணர்வை இளையோரிடையே ஏற்படுத்த மத்திய அரசின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

1975 ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் தேதி அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர காலத்தில் நேரிட்ட அத்துமீறல்கள் குறித்து திருச்சி தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்பு குழு செயலாளர் திரு.புஷ்பவனம் எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்

**வாய்ஸ்**

***********

**முதலமைச்சர்**

போக்குவரத்து கழகத்தின் சார்பில் 208 கோடி ரூபாய் மதிப்பிலான 120 புதிய மின்சார பேருந்துகளின் சேவையை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை வியாசர்பாடி பணிமனையிலிருந்து இன்று துவக்கிவைத்தார்.

47 அரை கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட மின்சார பேருந்து பணிமனையையும் அவர் திறந்துவைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 59 சித்தா உதவி மருத்துவ அலுவலர்களுக்கும்,

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 57 பேருக்கும் பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் வழங்கினார்.

***********

**உதயநிதி**

தமிழகத்தில் அரசின் அனைத்து புள்ளி விவரங்களும் வெளிப்படையாக உள்ளது என துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நந்தனம் மெட்ரோ ரயில் கூட்டரங்கில் 19ஆவது தேசிய புள்ளியியல் தின விழாவில் பேசிய அவர், **பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை** அலுவலர்கள் பங்கேற்ற, துறை போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

***********

**சேகர்பாபு**

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னையில் நடபெறும் ஒருங்கிணைந்த வளாக பணிகளை சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைவரும், மாநில அமைச்சருமான திரு.சேகர்பாபு இன்று நேரில் ஆய்வு செய்தார்.

இப்பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

***********

**மேட்டூர்**

மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் நாமக்கல் மாவட்டம் ஜேடர்பாளையம் அணைக்கட்டு பகுதிகளில் மக்கள் குளிக்க நீர்வளத்துறை தடை விதித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

இதனிடையே திருச்சி முக்கொம்பு மேலணைக்கு 25 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

காவிரியில் 24 ஆயிரத்து 700 கன அடியும்,

கிளை வாய்க்காலில் 300 கன அடியும் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

***********

**விம்பிள்டன்**

விம்பிள்டன் கிராண்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகள் லண்டனில் இன்று தொடங்குகின்றன.

வரும் 13-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டிகளில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி, ரோஹன்போபன்னா, ரித்விக் போளிபள்ளி, ஸ்ரீராம்பாலாஜி உள்ளிட்டோர் இரட்டையர் பிரிவில் பங்கேற்கின்றனர்.

நடப்பு சேம்பியன் அல்கராஸ்,

நோவாக் ஜோக்கோவிச்,

சின்னர்,

பெட்ரா க்விக்டோவா,

எலினா,

ஸ்விட்டோலினா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இதில் களமிறங்குகின்றனர்.

***********

**கிரிக்கெட்**

இந்திய - இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான 2ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி Bristol -இல் நாளை நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

***********